தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1969 ஆகஸ்ட் 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்.

முன்னாள் உறுப்பினர்கள் சிலர் மறைவுகுறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவள்ளூர் பொதுத் தொகுதிக்காக 1952-ல் இருந்து 1957-வது ஆண்டு வரையிலும், பொன்னேரி பொதுத் தொகுதிக்காக 1957-ல் இருந்து 1962-வது ஆண்டு வரையிலும் தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த திரு. வி. கோவிந்தசாமி நாயுடு அவர்கள் 7—4—1969 அன்று காலமானதற்கும்;

1957-ல் இருந்து 1962 வது ஆண்டுவரை தேனி பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், 1964-ல் இருந்து சட்ட மேலவையில் மதுரை உள்ளாட்சித் தொகுதியின் சார்பில் உறுப்பினராக இருந்து வந்தவருமான திரு. என். ஆர். தியாகராஜன் அவர்கள் 27—4—1969 அன்று மறைந்து விட்டதற்கும்;

1957-ல் இருந்து 1962-வது ஆண்டு வரை சிவகங்கைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக இருந்த திரு. டி. சுப்பிரமணிய ராஜகுமார் அவர்கள் 3—6—1969 அன்று காலமானதற்கும்;

1957-ல் இருந்து 1967-வது ஆண்டு வரை சென்னை வண்ணாரப் பேட்டை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எம். மாயாண்டி நாடார் அவர்கள் 20—6—1969 அன்று காலமானதற்கும்;

1952-ல் இருந்து 1953-வது ஆண்டு வரை ஆஸ்பட் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இப்பேரவையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான டாக்டர் ஆர். நாகன் கௌடா அவர்கள் 19—7—1969 அன்று மறைந்துவிட்டதற்கும்;

1937-ல் இருந்து 1939-வது ஆண்டு வரையிலும், 1946-ல் இருந்து 1952-வது ஆண்டு வரையிலும் எல்லூர் பொது, கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இப்பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எம். பாபிநீடு அவர்கள் 24—7—1969 அன்று காலமானதற்கும்;

[பேரவைத் தலைவர்] [1969 ஆகஸ்ட் 16

இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றார்கள்.)

2. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Central Reserve Police.

*1. Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether the State Government is consulted by the Union Government whenever Central Reserve policemen are posted in this State?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி சென்ட்ரல் ரிசர்வ் போலீசைப்பற்றியது. மத்திய க்ஷேமநல காவல் படையினரைப்பற்றி என்று தமிழாக்கம் செய்திருக்கிறார்கள். மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டதன் பேரில் இந்தப் படையை அனுப்பியிருக்கிறார்களா? இந்தப் படை அமைப்புப் பற்றி அரசாங்கம் என்ன கருத்து கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மத்திய அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது மாநில அரசு, சென்ட்ரல் ரிசர்வ் போலீஸ் உதவி வேண்டுமென்று கேட்டுக்கொண்டது. அதற்காக அவர்கள் கோவையிலே முகாமிட்டார்கள். ஆனால் அவர்களை இந்தக் காரியத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளத் தேவையில்லாமல் போய்விட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது சென்ட்ரல் ரிசர்வ் போலீஸ் கொண்டு வரப்பட்டது என்று சொன்னார்கள். இருந்தாலும்கூட அவர்கள் ஒரு முறை கொண்டுவரப்பட்டபிறகு, அவர்களை எந்தெந்த இடத்திலே எங்கே வைக்கவேண்டுமென்பது பற்றி இங்கே இருக்கிற இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் போன்றவர்களைக் கலந்து கொண்டு செய்யப்படுகிறதா? அல்லது முதல் அமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டு செய்கிறார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த மத்திய போலீஸ் படை தமிழ்நாடு, ஆந்திரம், மைசூர், கேரளம் ஆகிய இந்த மாநிலங்களுக்கு சோனல் அமைப்பாக இருக்கிறது. இந்தப் படை பெங்களூரிலே முகாம் செய்திருக்கிறது. மாநில அரசு தங்களுக்குத் தேவை என்று கூறுகிற நேரத்திலே வருகிறார்கள். மாநிலத்தில